www.Padasalai.Net www.CBSEtips.in

No. of Printed Pages : 8 +2 219382 **6301**

பதிவு எண் J u l y - 2 2

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் :

(அ) யாப்பருங்கலக்காரிகை (ஆ) தண்டியலங்காரம்

(இ) தொல்காப்பியம் (ஈ) நன்னூல்

2. ''மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!''

- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்.

(அ) அடிமோனை, அடிஎதுகை (ஆ) சீர்மோனை, சீர்எதுகை

(இ) அடிஎதுகை, சீர்மோனை (ஈ) சீர்எதுகை, அடிமோனை

3. யார் ? எது ? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே __________.

(அ) அஃறிணை, உயர்திணை (ஆ) உயர்திணை, அஃறிணை

(இ) விரவுத்திணை, அஃறிணை (ஈ) விரவுத்திணை, உயர்திணை

[ திருப்புக

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. ''இவற்றை இன்முகத்துடன் வாயிலுக்கே சென்று வரவேற்பாயாக'' என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது :

(அ) வக்கிரம் (ஆ) அவமானம்

(இ) வஞ்சனை (ஈ) இவை அனைத்தும்

5. ''நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது'' என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது :

(அ) சூரிய ஒளிக்கதிர் (ஆ) மழை மேகங்கள்

(இ) மழைத் துளிகள் (ஈ) நீர் நிலைகள்

6. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்'

- இத்தொடர் உணர்த்தும் பண்பு.

(அ) நேர்மறைப் பண்பு (ஆ) எதிர்மறைப் பண்பு

(இ) முரண் பண்பு (ஈ) இவை அனைத்தும்

7. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர் :

(அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

(ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

(இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

(ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

8. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

(அ) வசம்பு (ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

(இ) கடுக்காய் (ஈ) மாவிலைக்கரி

9. கீழ்க்கண்டவற்றுள் கடலைக் குறிக்கும் சொல் :

(அ) முகடு (ஆ) பௌவம் (இ) பாலை (ஈ) வரை

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. பிழையான தொடரைக் கண்டறிக.

(அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

(ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

(இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

(ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

11. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

(அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

(ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

(இ) வறட்சி அனைத்து இடங்களையும் பாதித்துள்ளது

(ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

12. வெண்பாவிற்குரிய ஓசை :

(அ) அகவலோசை (ஆ) செப்பலோசை

(இ) துள்ளலோசை (ஈ) தூங்கலோசை

13. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

- என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.

(அ) தனிக்குடும்ப முறை (ஆ) விரிந்த குடும்ப முறை

(இ) தாய்வழிச் சமூக முறை (ஈ) தந்தைவழிச் சமூக முறை

14. தம்பி நெல்லையப்பருக்கு - கட்டுரையின் ஆசிரியர் :

(அ) பாரதியார் (ஆ) உத்தம சோழன்

(இ) பூமணி (ஈ) ஐராவதம் மகாதேவன்

[ திருப்புக

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3x2=6**

**15.** கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?

**16.** 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

**17.** கலி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.

**18.** ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. **2x2=4**

**19.** நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

**20.** புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.

**21.** பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. **7x2=14**

**22.** முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

**23.** ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) சாய்ப்பான் (ஆ) விளங்கி

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

25. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம் ? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) கண்ணிரண்டும் ________ இலாதார்/இல்லார்

(ஆ) வெண்ணிலவு ________ காய்கிறது/ஒளிர்கிறது

26. பின்வரும் சொற்களில் ஏதேனும் ஒரு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.

(அ) தாமரை (ஆ) கோவில்

27. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) பூம்பாவாய் (ஆ) வானமெல்லாம்

29. கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றனுக்கு கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்கவும்.

(அ) குதிரை, வேகம், ஓடு, தாவு

(ஆ) திரை, காண், கைதட்டல், மக்கள்

30. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்கவும்.

அலை - அழை

[ திருப்புக

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. **2x4=8**

31. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார் ?

33. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது ? குறள் வழி விளக்குக.

34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்'
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. **2x4=8**

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள் ?

38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்குக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. **3x4=12**

39. (அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



40. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
    வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
    கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
    தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
    எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

41. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

(அ) யானைக்கும் அடிசறுக்கும்

அல்லது

(ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

43. 'கடல்' அல்லது 'அன்பு' என்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு மிகாமல் எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **3x6=18**

44. (அ) வெகுளாமை குறித்து திருவள்ளுவர் உரைப்பன யாவை ?

அல்லது

(ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன ?

[ திருப்புக

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



45. (அ) 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி நன்றியுரை எழுதுக.

அல்லது

(ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. (அ) மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

அல்லது

(ஆ) சங்க கால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டுகள் எவ்வகையில் துணை புரிகின்றன ? - விளக்குக.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4+2=6

(அ) "குழல் வழி...." எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

அல்லது

(ஆ) "சுடும்" என முடியும் குறள்.

- o O o -

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com